Nallur Branch Library

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 ஆவணி 25 செவ்வாய்க்கிழமை (10-09-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 206

# ஈழ அகதிகளின் வருகை குறித்து இந்திய அரசு கவலை தெரிவிப்பு!

## நாடாளுமன்றில் அமைச்சர் குஜ்ரால் தகவல்

புதுடில்லி, செப்டெம்பர் 10

**இலங்கைத் தமிழ் அகதிகள் மீண்டும் இந்தியாவுக்கு வரவேண்டிய சூழ்நிலை உருவாகியிருப்பது குறித்து இந்திய அரசு தனது கவலையை இலங்கை அரசுக்குத் தெரிவித்திருக்கின்றது.**

இந்திய நாடாளு மன்றத்தில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கு நேற்று எழுத்து மூலம் சமர்ப்பித்த பதிலில் இந்திய வெளி விவகார அமைச்சர் இந்திரகுமார் குஜ்ரால் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.

இலங்கைப் படைகள் கிளிநொச்சிப் பிரதேசத்தில் ஆரம்பித்துள்ள இராணுவ நடவடிக்கைகள் காரணமாக மன்னார், பேசாலைப் பகுதிகளிலிருந்து ஆயிரத்துக்கும் அதிகமான இலங்கைத் தமிழ் அகதிகள் தமிழ் நாட்டுக்கு வந்து சேர்ந்துள்ளனர்.

இப் பிரதேசத்தில் இலங்கைப் படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம் பெறும் மோதல்களினால் அப்பாவிப் பொதுமக்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். — இவ்வாறு அமைச்சர் குஜ்ரால் தமது பதிலில் மேலும் தெரிவித்திருக்கின்றார்.

(உ-3-10)

## கொள்ளையரை தூக்கிலிட்டனர்

கிராமம் ஒன்றின் சந்தையில் கொள்ளை அடிக்க முயன்ற ஆயுதம் தாங்கிய பதினொரு பேர் அந்தக்கிராம மக்களினால் தூக்கிலிடப்பட்டு கொல்லப்பட்டனர்.

இந்தியாவின் அஸாம் மாநிலத்தில் இச்சம்பவம் இடம்பெற்றது.

பொதுமக்களால் பிடித்து வைக்கப்பட்டிருந்த மேலும் 5 கொள்ளையர்கள் பல மணித்தியாலங்களின் பின்னர் அங்கு வந்த பொலீசாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

## துன்னாலையில் மோதல்

கொழும்பு, செப். 10

பருத்தித்துறை, துன்னாலைப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் ஒரு படைவீரரும் ஒரு விடுதலைப் புலிப் போராளியும் கொல்லப்பட்டதாகவும் —

இரு படையினர் காயமடைந்ததாகவும் — பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைச் செயலகம் அறிவித்துள்ளது.

பாதுகாப்புப் படையினரின் காவலரண் ஒன்றுக்குள் புலிகள் நுழைய முயன்றபோது இந்த மோதல் இடம்பெற்றதாக மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-10)

## நேர மாற்றம் குறித்து ஆராய குழு நியமனம்

கொழும்பு. செப். 10

இலங்கையின் நேரத்தை ஒரு மணித்தியாலமாக நீடிக்கப்பட்டதால் ஏற்பட்டுள்ள பாதக, சாதக நிலை குறித்து ஆராய குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள், மின்சக்தி அமைச்சர் அனுருத்தரத்வத்த இந்தக் குழுவை நியமித்துள்ளார்.

கடந்த மேமாதம் 25 ஆம் திகதி இலங்கையின் நேரம் ஒரு மணித்தியாலம் நீடிக்கப்பட்டது.

மின்சாரத்தைச் சேமிக்க இந்த நடவடிக்கையை அரசு எடுத்திருந்தது. (இ-3)

## யாழ். நகரில் மக்கள்குழு; நேற்று அங்குரார்ப்பணம்

''நல்லெண்ணத்துக்கும் சமாதானத்துக்குமான மக்கள் குழு'' ஒன்று நேற்று யாழ். நகரில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

யாழ். ஆயர் இல்லத்தில் நடந்த கூட்டம் ஒன்றிலேயே இக்குழு அமைக்கப்பட்டது.

இக்குழுவின் தலைவராக திரு. சி. வி. கே. சிவஞானமும், இணைச் செயலாளர்களாக வணபிதா செல்வராசா அடிகளும், திரு. பி. பரமநாதனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு கஷ்டங்கள் குறித்தும்— இக்குழுவின் செயற்பாடு குறித்தும்—அரச அதிபருக்குக் கடிதம் ஒன்றை அனுப்புவதென இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. (இ-3)

## கப்பலில் மண்எண்ணெய் காங்கேசன் வருகிறது

யாழ்ப்பாணம் செப். 10

குடாநாட்டுக்குத் தேவையான எரிபொருள்களுடன் ''சில்க்வோம்'' என்ற கப்பல் நாளை காங்கேசன் துறைக்கு வந்துசேரும் என எதிர்பார்க்கப் படுகிறது.

இந்தக்கப்பலில் மண்எண்ணெய், டீசல், என்ஜின் ஒயில் ஆகியன எடுத்து வரப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

அதே சமயம் மண்எண்ணெய்க்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய உடன் நடவடிக்கை எடுப்பதென செயலகத்தில் நடந்த கூட்டம் ஒன்றில் முடிவு செய்யப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் செயற்படும் 21 முகவர்கள் ஊடாக இவ்வாரம் முதல் மண்எண்ணெயை வழங்கும் பணியை பெற்றோலியம் கூட்டுத்தாபனம் மேற்கொள்ளும் என்றும் —

வலிமேற்கு, வலி - வடக்கு வலி-தெற்கு பிரதேச செயலக பிரிவுகளில் உள்ளவர்களுக்கு இம்முறைமட்டும் ப. நோ. கூ.

(6 ஆம் பக்கம் பார்க்க)

# முன்னணி சிங்கள புத்திஜீவிகளுடன் தமிழ்க் கட்சிகள் இன்று சந்திப்பு!

## அரசியல் தீர்வின் அவசியம் குறித்து வலியுறுத்தப்படும்

கொழும்பு, செப். 10

வடக்கு — கிழக்கு நெருக்கடிக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டியதன் அவசியத்தை சிங்களப் புத்திஜீவிகள் மட்டத்தில் வலியுறுத்த 5 தமிழ் அரசியல் கட்சிகள் முடிவு செய்துள்ளன.

இது குறித்து 30 முன்னணி சிங்கள புத்தி ஜீவிகளுடன் தமிழ் அரசியல் கட்சிகள் இன்று சந்திப்பு ஒன்றை நடத்த விருக்கின்றன.

ஈ. பி. டி. பியின் அனுசரணையுடன் இந்தச் சந்திப்புக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஈ. பி. டி. பி, ஈ பி. ஆர். எல். எவ், ஈரோஸ், புளொட், ரெலோ ஆகியவற்றின் தலைவர்கள் தமிழ் அரசியல் கட்சிகள் சார்பில்பங்குபற்றி சிங்கள புத்தி ஜீவிகளுடன் விரிவான பேச்சுக்களை நடத்துவர்.

ஈ. பி. ஆர். எல். எவ் அமைப்பின் செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச் சந்திரன் இது பற்றி கருத்து வெளியிடுகையில், தமிழ் புத்தி ஜீவிகளுடன் கடந்த மாதம் தமிழ்க் கட்சிகள் சந்திப்பு ஒன்றை நடத்தின. இச்சந்திப்பின் தொடர்ச்சியாக சிங்கள புத்தி ஜீவிகளுடனும் சந்திப்பு நடத்தப்படுகிறது.

இன்றைய அரசியல் நடவடிக்கைகள் ஆரோக்கியம் அடைவதற்கு அனைத்துதரப்பினது ஒத்துழைப்பும் அவசியமானதாகும்.

தமிழ் அரசியல் கட்சிகள் ஒரு விரிவான அரசியல் தீர்வையே எதிர்பார்க்கின்றன. ஆனால் அத்தகைய தீர்வு கண்ணுக்கு எட்டிய தூரத்தில் இல்லை.

சிங்கள புத்திஜீவிகள் மூலமாக சிங்கள மக்களது பல தரப்பட்ட கருத்துக்கண்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பிரதேச செயலகம் மூலம் நிவாரணம்

# வியாழன் முதல் புதிய நடைமுறை அமுலாகும்

யாழ்ப்பாணம், செப் 10

இடம் பெயர்ந்த மக்களுக்கான உலர் உணவு விநியோகம் எதிர்வரும் வியாழக்கிழமை முதல் பிரதேச, உதவி அரசாங்க செயலகங்கள் மூலமாக மேற் கொள்ளப்படவிருக்கின்றன.

யாழ். செயலகத்தில் நேற்று நடந்த பிரதேச செயலர், உதவி அரசாங்க அதிபர், ப. நோ. கூ. ச. பிரதிநிதிகள் கலந்து கொண்ட கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப்பட்டது.

அரச அதிபர் திரு. செ. பத்மநாதன் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் உணவு விநியோகத்தை பன்முகப் படுத்துவது குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

இதுவரை காலமும் யாழ். செயலக புனர்வாழ்வுப் பிரிவால் மேற் கொள்ளப்பட்டு வந்த இந்தப் பணி உடனடியாக பன்முகப்படுத்தப்பட்டுள்ளதாக அரச அதிபர் தெரிவித்தார். (இ-3)

# மல்லாவியிலுள்ள பிரெஞ்சு வைத்திய பிரிவு எந்நேரமும் மூடப்படலாம்!

## போதிய மருந்து வகைகள் இல்லை

லண்டன். செப். 10

போதிய மருந்து வகைகள் இல்லாத காரணத்தால் மல்லாவியில் இயங்கும் தமது வைத்திய சேவைப் பிரிவை விரைவில் மூட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக எம். எஸ். எவ் என்னும் பிரெஞ்சு வைத்திய குழுப் பிரதிநிதி பிரான்சிஸ் ஸ்ரீவின்சன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் இயங்கிய தமது வைத்தியப் பிரிவு தற்சமயம் மல்லாவியில் இயங்குகின்றது என்றும் —

போதிய மருந்து வகைகளை கொழும்பில் இருந்து எடுத்து வர அனுமதி மறுக்கப்படுவதால் தமது பிரிவை மூட வேண்டிய நிலை உருவாகியுள்ளது என்றும் அவர் கூறினார்.

வன்னிப் பகுதியில் மலேரியா நோய் தீவிரமாகப் பரவி வருவதாகவும் —

குழந்தைகள் போஷாக்கின்றி இருப்பதாகவும் — அவர் தெரிவித்தார்.

(இ-3-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். மாநகரசபை
## முக்கிய வேண்டுகோள்

**11-09-96** புதன்கிழமை நல்லூர்க் கந்தன் தேர்ப் பவனியைக் கருத்திற் கொண்டு, அன்று காலையில் பொதுமக்களை, போக்குவரத்துக்கு இப்பகுதியைத் தவிர்க்கும்படி கேட்டுக் கொள்வதுடன், கோயிலுக்கு வரும் அடியார்கள் தம் துவிச்சக்கரவண்டி மற்றும் வாகனங்களை கோயில் முன்புறத்துக்கோ அல்லது வீதிகளுக்கோ கொண்டுவந்து நிறுத்துவதைத் தவிர்த்து கந்தன் தேர்ப்பணி சிறப்புற நடைபெற ஒத்துழைக்கு மாறு தயவன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

வே. பொ. பாலசிங்கம்.
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம். 09-09-96 (சி/2865)

## கண்ணீர் அஞ்சலி

### செல்வி ஞானந்தி கணநாதன்

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் உயர்திரு. ச. ந. கணநாதன் அவர்களின் புத்திரி செல்வி ஞானந்தி அவர்கள் **07. 09. 1996** இல் அகால மரணம் அடைந்ததையொட்டி அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

பணிப்பாளர், பணியாளர்கள்.

தென்மராட்சி மேற்கு ப. நோ. கூ. சங்கம்,
கைதடி. 09. 09. 1996 (சி/2867)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்வி நிலைய ஆண்டு 10 மாணவி
செல்வி ஷானந்தி கணநாதனின் சகோதரி

### செல்வி ஞானந்தி கணநாதன்

(யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி க. பொ. த. உயர்தர மாணவி)

அவர்களின் அகால மரணத்தையொட்டி பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கு எமது கல்வி நிலைய ஆசிரியர்கள், மாணவர்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

றேடியன்ற் கல்வி நிலைய ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

(42661)

## கண்ணீர் அஞ்சலி

### தியாகராசா தவநேசன்

(யாழ். பல்கலைக்கழகம் 2 ஆம் வருட பௌதீக விஞ்ஞான பீட மாணவன்)

அழியாத சுடர் விளக்காய் அன்பின் பேருயிராய்
தியாகராச சரஸ்வதி தம்பதிகளுக்கு அவதரித்த
திலகமே...... தவநேசா......
பல்கலையும் கற்று பல்கலைக்கழகம் புகுந்து
விஞ்ஞான பீடம் வியக்க நின்றாயே....
சங்கரத்தை மண்ணில் உயர்வுக்காய்
சக தோழருடன் இந்து வாலிபர் சங்கத்தில்
இணைந்து சேவை செய்தவனே!
இன்று எங்கே போனாய்?
உன் உடல் அழிந்தாலும் - உன்
புகழ் வாழும் இனியவனே......!

உன் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்து வாலிபர் சங்கம்,
சங்கரத்தை.

(C/2866)

## கண்ணீர் அஞ்சலி

எமது சகமாணவன்

### அமரர் இரத்தினம் ஜெஜன்

(முதலாம் வருட வர்த்தகத்துறை மாணவன் யாழ். பல்கலைக்கழகம்)

அவர்களின் இழப்பினால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது கண்ணீர்ப் பூக்களினை அஞ்சலியாக்குகின்றோம்.

முதலாம் வருட (**94/ 95**)
கலைப்பீட மாணவர்கள்,
யாழ். பல்கலைக்கழகம்.

(42658)

## சமய சந்நிதிகளில்

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்தத் தேர்த் திருவிழா நாளை காலை 7மணிக்கு நடைபெறவுள்ளது.

காலை 6 மணிக்கு விசேட அபிஷேகத்தைத் தொடர்ந்து வசந்த மண்டபப் பூசை நடைபெற்று முருகப்பெருமான் வள்ளி தெய்வானை சமேதராக தேரேறி வந்து அடியார்களுக்குத் திருவருள் பாலிப்பார்.

இன்று மாலை 4 மணிக்கு சப்பறத் திருவிழா நடைபெறும். (அ-30 111)

★ ★ ★

தாவடி தெற்கு ஸ்ரீ காளி அம்பாள் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா நாளை புதன் கிழமை நடைபெறும். அடுத்த நாள் தீர்த்தத் திருவிழா இடம்பெறும். (அ-111)

★ ★ ★

அராலி மேற்கு, கோட்டைக்காடு ஸ்ரீ விநாயகர் ஆலய வருடாந்தத் தேர்த் திருவிழா நாளை மு. ப. 10 மணிக்கு நடைபெறும். வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழா நடைபெறும். (அ-30)

★ ★ ★

முகமாலை அன்னை வேளாங்கண்ணி மாதா தேவாலய நவநாள் உற்சவம் ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

இம்மாதம் 14 ஆம் திகதி சனிக்கிழமை மாலை திருநற்கருணை ஆராதனையும் திருப்பலி பூஜையும் இடம்பெற்று, மறுநாள் ஞாயிறு காலை திருநாட்பாடற்பலி பூஜையும் திருச்சொரூப பவனியும் இடம்பெறும். (அ-117)

## நோயாளர் எண்ணிக்கை அதிகரிப்பு

வடமராட்சி, செப். 10

வல்வெட்டித்தறை மாவட்ட அரசினர் வைத்தியசாலையில் நோயாளர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

அதேசமயம் மருந்து வகைகளுக்கு அங்கு பலத்த தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-173)

## சுக்ராமின் முன் பிணை மனு ஒத்திவைப்பு

புதுடில்லி, செப். 10

இந்திய தொலைத் தகவல் தொடர்புத்துறை முன்னாள் அமைச்சர் சுக்ராமின் முன் பிணை அனுமதி மனு மீதான தீர்ப்பை டில்லி நீதிமன்றம் இன்று வரை ஒத்திவைத்துள்ளது.

சுக்ராமின் வழக்கறிஞர் தினேஷ் மாத்தூர் எழுப்பிய பூர்வாங்க ஆட்சேபனையை அடுத்தே தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டது. (இ-10)

## கடல் கொண்ட குமரிக் கண்டம் குறித்து ஆய்வு

சென்னை, செப். 10.

கன்னியாகுமரிக்குத் தெற்கே பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் கடலில் மூழ்கிவிட்ட குமரிக்கண்டத்தை ஆய்வு செய்ய 5கோடி ரூபா செலவிலான திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருப்பதாக தமிழ் பண்பாட்டுத்துறைச் செயலாளர் நேற்று நாகர் கோயிலில் தெரிவித்தார்.

கடல் கொண்ட குமரிக்கண்டத்தில் 64 நாடுகள் இருந்ததாகவும் இந்த உத்தேச ஆய்வு மேற்கொள்ளப்பட்டால் பண்டைக்காலத் தமிழர்களின் கலாசாரம், பண்பாடு போன்றவற்றை அறிய வழி ஏற்படும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-10)

நாளைய தினம் **1996-9-11** ஆம் திகதி

## யாழ்ப்பாணக் கல்லூரியில்

காலை 8-30 மணிக்கு

# மஹாகவி பாரதி விழா 1996

★ பாரதி கருத்தரங்கம்
★ சிறப்புப்பட்டிமண்டபம்
★ பாரதி பண்ணிசை
★ நடன விருந்து

ஆகியவை இடம் பெறக் காத்திருக்கின்றன.

அலைகடலெனத் திரண்டே
அனைவரும் வருக!

'தமிழ்க் கலா மன்றம்',
யாழ்ப்பாணக் கல்லூரி,
09 –09 –1996 வட்டுக்கோட்டை.
(சி/2863)

## மரண அறிவித்தல்கள்

### வஸ்தியாம்பிள்ளை மனுவேற்பிள்ளை (எதிர்வீரசிங்கம்)

வஸ்தியாம்பிள்ளை மனுவேற்பிள்ளை (எதிர்வீரசிங்கம்) (முன்னாள் ஆசிரியர் புனித பெனடிக்ற் கல்லூரி, கொழும்பு) 7-9-96 ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் மரியம்மாவின் அன்புக் கணவரும், பிற்றோபி இமகுமார், ஜெயக்குமார் (குமார் றேடிங் கொம்பனி, கொழும்பு), செல்வகுமார் (பிரான்ஸ்), விக்டர் விமல குமார் (நோர்வே), ஜீவகுமார் (நோர்வே) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், பவுலினா (கொழும்பு) கொன்சி (பிரான்ஸ்), வோறஸ்ரீனா (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமனாரும், பெஸ்மன், மரிஸ்ரன், ஜெனிஸ்ரன், ஸ்ரீபனி ஆகியோரின் ஆசைப்பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் 9-9-96 (திங்கட்கிழமை) மாலை நான்கு மணியளவில் கரவெட்டி கீரிப்பல்லி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ச. அ. மாகிறற்மெலனி
''ஜெயபாக்கியவாசா'' (மருமகள்)
கலட்டி,
கரவெட்டி. (42650)

### அழகசுந்தரம் சொர்ணம்மா

தீர்த்தாங்குளப் பிள்ளையார் கோயிலடி, அச்சுவேலியைச் சேர்ந்த அழகசுந்தரம் சொர்ணம்மா 8 - 9 - 96 இல் இருபாலையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சபாபதி ஐயா — அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற அழகசுந்தரத்தின் (கிளாக்கர்) அன்பு மனைவியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (9-9-96) இருபாலையில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
அ. பாலசுப்பிரமணியம்
கோப்பாய் தெற்கு, (நடுவில்) (மருமகன்)
கோப்பாய். (42659)

### சிவப்பிரகாசம் இரத்தினம்மா

புன்னாலைக்கட்டுவன் வடக்கு, ஈவினையைச் சேர்ந்த சிவப்பிரகாசம் இரத்தினம்மா காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவப்பிரகாசத்தின் அன்பு மனைவியும், சிவகுமாரி (மந்திகை அரசினர் வைத்தியசாலை), திருஞானகுமார் (பாடசாலைக் காவலாளி), வசந்தகுமாரி (ஆசிரியர்), இராசகுமாரி, ஜெயக்குமார், சந்திரகுமாரி(கனடா) நந்தகுமார்(சுன்னாகம் ப நோ. கூ. சங்கம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சொக்கலிங்கம், யோகலிங்கம், சத்தியபரமேஸ்வரன், ரவிச்சந்திரன், செல்வலட்சுமி, மஞ்சுளா, குகபாலினி ஆகியோரின் மாமியாரும், சுஜித்கண்ணா, சிந்துளா, பிரகலாதன், பிறேமலா, பிரப ஜினி, நரேஸ்கண்ணா, தர்மிளா, லக்ஸ்சாயினி, நிறோசி, மதுசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.09.96) செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் ஈவினை குடும்பமயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
சி. நந்தகுமார்
(44660)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Nallur Branch Library

# போட்டி குர்டிஷ் குழுக்கள் மீண்டும் கடும்சண்டை!

## ஈரான் எல்லையை நோக்கி அகதிகள்

பாக்தாத் செப். 10

வடஈராக்கில் இரு போட்டி குர்டிஷ் குழுக்கள் மத்தியில் மீண்டும் கடும் சண்டை மூண்டிருக்கிறது.

இந்தச் சண்டையில் ஈராக் அரசுக்கு ஆதரவான குழுவின் கைகள் ஓங்கி வருவதாகவும்— ஆயிரக்கணக்கான மக்கள் அகதிகளாக ஈரான் எல்லையை நோக்கி வாகனங்களில் சென்று கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே இடம்பெற்ற இத்தகைய மோதல்களின் போதே, வடஈராக்கில் உள்ள குர்டிஷ் பிரதேசத்துக்குள் ஈராக் படைகள் சென்றிருந்தன.

வட ஈராக்கில் இருந்து தனது படைகளை ஈராக் வாபஸ் பெறத் தவறியதை அடுத்தே அமெரிக்கா ஈராக்கின் தென்பகுதி மீது ஏவுகணைத் தாக்குதல் நடத்தி இருந்தது.

இந்த ஏவுகணைத் தாக்குதலில் ஈராக்கின் பெரும்பாலான இராணுவ இலக்குகள் சேதம் அடைந்து விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது

இவற்றைத் திருத்தும் நடவடிக்கையில் ஈராக் ஈடுபட்டால் ஈராக் மீது மீண்டும் ஏவுகணைத் தாக்குதல் நடத்தப் போவதாக அமெரிக்கா எச்சரித்துள்ளது,

(இ-3-10)

# விளம்பர அழகியாக இளவரசி டயானா?

லண்டன், செப். 10

பிரிட்டிஸ் இளவரசி டயானாவை அமெரிக்காவின் ''ஓம்னிப்போன்'' என்ற தொலைபேசி நிறுவனமும் அமெரிக்க விமான நிறுவனம் ஒன்றும் தங்களுக்கு விளம்பரம் செய்யும் அழகியாக கடமையாற்றும் படி கோரிக்கை விடுத்துள்ளன

டயானா மட்டும் ஆம் என்று கூறி விட்டால் கணப்பொழுதில் அவர் உலகத்தின் ''சூப்பர்'' அழகியாகவும் 12 கோடி ரூபா தொகைக்கு அதிபதியாகவும் மாறிவிடலாம் எனவும் அந்த நிறுவனங்கள் கூறுகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

இளவரசி டயானா, முடிக்குரிய இளவரசர் சார்ள்ஸிடமிருந்து விவாகரத்துப் பெற்றிருப்பது தெரிந்ததே.

(இ-10)

## பங்களாதேஷின் பிரபல நடிகர் ஷர்மான் கொலை

### சுருக்கிட்டு தொங்கிய நிலையில் சடலம்

டாக்கா, செப். 10

பங்களாதேஷின் பிரபல நடிகர் ஷர்மான் ஷா நேற்று இறந்து கிடக்கக் காணப்பட்டார்.

இவரை எவராவது கொலை செய்திருக்கலாம் என இவரது தந்தையார் தெரிவிக்கும் அதே வேளை இந்த நடிகர் தற்கொலை செய்துள்ளார் எனப் பரவலாகப் பேசப்படுகிறது.

ஷர்மான் ஷா தனது முதலாவது திரைப்படத்தின் மூலமே உலகப் புகழைச் சம்பாதித்துக் கொண்டவர். கல்வி கற்கும் காலத்திலேயே இவர் திருமணம் செய்து கொண்டார். சினிமா உலகப் பிரவேசத்தின் பின்னர் இவருக்கு வேறு தொடர்புகள் ஏற்பட்டதாகப் பரவிய வதந்திகளால் இவர் மனக்குழப்பமடைந்திருந்தார் என்று கூறப்படுகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை வீட்டு வளையில் அவர் சுருக்கிட்டு தொங்கிக் கொண்டிருந்ததை அவரது மனைவி கண்டுள்ளார்.

இது கொலையாக இருக்க வேண்டும் என மரணவிசாரணை அதிகாரி நம்புகிறார். (இ-10)

## உலக அரங்கில்

### சோமாலிய குழந்தைகள் கடத்தல்

இத்தாலி, செப். 10

சோமாலியா நாட்டிலிருந்து குழந்தைகளைக் கடத்தி வந்து இத்தாலியில் வைத்திருந்த கடத்தல் கும்பல் ஒன்றை இத்தாலி நாட்டுப் பொலீஸார் வளைத்துப் பிடித்தனர்.

அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் உள்ள குழந்தைப் பேறு அற்ற தம்பதிகளுக்கு குழந்தைகளை தலா 12இலட்சம் ரூபாவுக்கு விற்க வைத்திருந்தபோதே கடத்தல்காரர்கள் கைது செய்யப்பட்டனர். (இ-10)

## பாடசாலைக் கட்டணம் செலுத்தப் பணம் இல்லை

### மாணவன் தற்கொலை

பதினொரு வயதான சிறுவன் ஒருவன் பாடசாலைக் கட்டணத்தை செலுத்த முடியாத காரணத்தால் தனக்குத் தானே கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்து கொண்ட சம்பவம் ஒன்று இஸ்ரேலில் இடம்பெற்றது.

பாடசாலையில் சேர்ந்த முதல் நாளே பாடசாலைக் கட்டணத்தை கட்டத் தவறிய காரணத்தால் தனக்கு தரப்பட்ட பாடப்புத்தகங்களை திருப்பிக்கொடுத்து விட்டு வீடு திரும்பிய இச்சிறுவன் —

மற்ற மாணவர்கள் முன்னிலையில் பாடசாலையில் தான் சிறுமைப்படுத்தப்பட்டதாக தெரிவிக்கும் கடிதமொன்றை எழுதி வைத்து விட்டு பூட்டிய அறையினுள் தூக்குப் போட்டுக் கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

# சென்னை நகர மேயர் பதவிக்கு ஸ்ராலின்

விரைவில் தமிழ்நாட்டில் நடைபெறவுள்ள உள்ளாட்சித் தேர்தல்கள் தொடர்பான வேட்பாளர் பட்டியலை தி.மு.கவின் செயலாளர் அன்பழகன் நேற்று வெளியிட்டார்.

சென்னை நகர மேயர் பதவிக்கு வேட்பாளராக தமிழக முதல்வரின் மகன் மு.க. ஸ்ராலின் நியமிக்கப்பட்டுள்ளார்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தோழமைக் கட்சிகளான இந்திய தேசிய லிக், அகில இந்திய போர்வேட் புளக், மக்கள் நல உரிமைக் கழகம், அம்பேத்கார் மக்கள் இயக்கம், கொங்கு வேளாளர் சங்கம் ஆகியன தி.மு.க. வின் சின்னத்தில் போட்டியிட முடிவு செய்திருப்பதாகவும் அன்பழகன் தெரிவித்தார்.

தி.மு. கவுக்கும் தமிழ் நாடு மாநிலக் காங்கிரஸ் கட்சிக்கும் இடையே ஏற்பட்ட தேர்தல் உடன்பாட்டின்படி தமிழ் நாடு மாநிலக் காங்கிரஸ் 36 நகராட்சிகளில் போட்டியிடவுள்ளது.

(இ-10)

காஷ்மீர் தேர்தல்:

## முதல் கட்ட வாக்குப்பதிவில் 53 வீதமானோர் வாக்களிப்பு

காஷ்மீரில் சனியன்று நடந்த முதலாவது கட்ட வாக்களிப்பின்போது ஆங்காங்கே நடந்த வன்முறைகளில் 11 பேர் கொல்லப்பட்டனர்.

தேர்தலைப் பகிஷ்கரிக்க வேண்டும் என பிரிவினைவாதிகள் கோரிக்கை விடுத்தபோதிலும் 53 சதவீதமானவர்கள் வாக்களித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

அமைக்கப்பட்டிருந்த 2 ஆயிரம் வாக்குச் சாவடிகளுககு பாதுகாப்பு அளிக்கும் பணியில் 2 இலட்சம் படையினர் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

அடுத்த கட்ட வாக்களிப்பு எதிர்வரும் 14 ஆம் திகதி நடைபெறவிருக்கிறது. (இ-10)

## விண்வெளியில் 169 நாள்கள் பறந்து சாதனை

அமெரிக்க விண்வெளி வீராங்களை சானன் லூக்கிட் கடந்த சனிக்கிழமை விண்வெளியில் 169 நாள்கள் சுற்றி வந்து அதிக நாள்கள் விண்வெளியில் பறந்த முதற்பெண்மணி என்ற சாதனையைப் படைத்துள்ளார். (இ-10)

ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சை:

## விடைத்தாள்கள் திருத்த 5 ஆயிரத்து 500 ஆசிரியர்

தற்போது நடைபெற்று வரும் ஜி. சீ. ஈ. உயர்தர பரீட்சை விடைத்தாள்களைத் திருத்தும் பணியில் 5,500 ஆசிரியர்கள் ஈடுபடுவார்கள்.

இதற்கான கடிதங்கள் ஏற்கனவே சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இந்த மாதம் 18 ஆம் திகதி விடைத்தாள்களைத் திருத்தும் வேலைகள் பதினொரு தேசிய பாடசாலைகளில் ஆரம்பிக்கப்பட உள்ளன. (இ-10)

# ரயில்வே பாதுகாப்பு தொண்டர் சேவை

## அடுத்த வாரம் முதல் இயங்கும்

கொழும்பு, செப். 10

இம் மாத நடுப்பகுதியில் இருந்து ரயில்வே பாதுகாப்பு தொண்டர் சேவை ஒன்றை ரயில்வே திணைக்களம் அமுல் செய்யவிருக்கிறது.

ரயில்களில் தினசரி பயணம் செய்யும் அலுவலக ஊழியர்கள் உட்பட ஆயிரத்து 200க்கும் அதிகமானோர் இந்த சேவையில் இணைந்துள்ளனர்.

ரயில்வே திணைக்களம் இவர்களுக்கு விசேட அடையாள அட்டைகளை வழங்கும்.

தெகிவளை குண்டு வெடிப்பையடுத்து இத்திட்டம் அமுல் செய்யப்படவிருக்கிறது.

### ஒப்படைக்கவும்

சாவகச்சேரி நகரசபையின் பிரதான பொதுநூல் நிலையம் மற்றும் நுணாவில் மீசாலை ஆகிய இடங்களில் உள்ள நூல் நிலையக் கிளைகளில் புத்தகங்களை ஏப்ரல் 19 ஆம் திகதிக்கு முன்னர் இரவல் பெற்றவர்கள் இம் மாதம் 15 ஆம் திகதிக்கு முன் அந்தந்த நூல் [illegible] அவற்றை [illegible] நகரசபை செயலாளர் சி. நடராசா அறிவித்துள்ளார்.

# நியாயமான தீர்வுக்கு ஐ. தே. க. முட்டுக்கட்டை

## நீலன் திருச்செல்வம் குற்றச்சாட்டு

தற்பொழுது ஐ. தே. கவினர் அதிகாரப் பரவலாக்கத்துக்கும், நியாயமான தீர்வைக் காண்பதற்கும் முட்டுக்கட்டையாக இருப்பது வேதனை தருகிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் நீலன் திருச்செல்வம் மேற்கண்டவாறு கூறினார்.

கடந்த சனிக்கிழமை காலை ஸ்ரீலங்கா முஸ்லிம் வெகுஜன தொடர்பு அமைப்பு ஏற்பாடு செய்திருந்த ''அதிகாரப் பரவலாக்கமும், முஸ்லிம்களின் எதிர் காலமும்'' என்னும் தலைப்பிலான கருத்தரங்கில் உரையாற்றுகையில் நீலன் திருச்செல்வம் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும்கூறியதாவது:-

இனப்பிரச்சினை தீர்க்கப்படுவதற்கு வெறுமனே அரசியல் பேச்சுவார்த்தை மட்டும் உரிய பயன் தரப்போவ[illegible] வார்த்தை [illegible] யுத்த நிறுத்தம் ஏற்படுத்துவதன் மூலமே நமது நாட்டில் கொழுந்து விட்டெரிந்து கொண்டிருக்கும் இனமோதலுக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும்.

இந்நாட்டில் உருவாக்கப்படும் எந்தவொரு அரசியல் திட்டமும் சமூகங்களில் தனித்துவத்தை பலப்படுத்தும் விதத்தில் தான் அமைய வேண்டும்.

இனப்பிரச்சினைத் தீர்வில் ஓர் அம்சமாக முஸ்லிம் அதிகார அலகு ஒன்று ஏற்படுத்தப்படவேண்டும் என்பதை தமிழர் விடுதலைக் கூட்டணி பகிரங்கமாக ஏற்றுக்கொள்கிறது.

முஸ்லிம்களுக்கு அதிகாரப் பகிர்வில் நியாயமான பங்கு வழங்குவது பற்றியும் நாம் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம்.

மங்கள முனசிங்க நாடாளுமன்றத் தெரிவுக்குழு இனப்பிரச்சினையைத்தீர்க்கும் எண்ணத்திலே இரண்டு முக்கிய முடிவுகளை எடுத்திருந்தது.

இந்தியாவின் அரசமைப்பின் அடிப்படையில் அதிகாரப்பரவலாக்கத்தை ஏற்படுத்தி மத்தியில் உள்ள அதிகாரங்களை மாகாணங்களுக்கு கொடுப்பது சம்பந்தமானவை அது.

அத்தகைய இணக்கப்பாட்டுக்கு ஐ. தே. கவினரும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினரும் உடன்பாடு தெரிவித்திருந்தனர்.

அந்தத் தெரிவுக் குழுவில் அங்கம் வகித்த ஐ. தே. க. வைச் சேர்ந்த டிரோன் பெர்னாண்டோ, விஜயபாலா மெண்டிஸ், ஏ. சி. எஸ் ஹமீட், காமினி அத்துக்கொறல, சொக்ஸி போன்றோர் அதற்கு ஆதரவளித்தனர்.

தற்பொழுது ஐ. தே. க. வினர் அதிகாரப்பரவலாக்கத்துக்கும், நியாயமான தீர்வைக் காண்பதற்கும் முட்டுக்கட்டையாகவிருப்பது வேதனையானது.

அரசியல் அலகு என்ற விடயத்தில் முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்கும், சிங்களவர்களுக்கும் இணக்கப்பாடு ஏற்படாத பட்சத்தில் இதனைச் செயற்படுத்த முடியாது.

இப்படி அவர் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

ரியூட்டரி பாவனைக்கு உகந்த மேசை, வாங்குகளும் பஜாஜ் ஸ்கூட்டரும் (ஒருகை பாவனையில் உள்ளது) விற்பனைக்கு உண்டு. விவரங்களுக்கு இல: 12, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (42645)

வீட்டுப் பாவனைப் பொருள்களும், தளபாடப் பொருள்களும், T. V அன்ரனா செற் மற்றும் மின்சாரப் பொருள்கள் யாவையும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ந. பத்மசூரியா (சூரி), இல: 101;, பிரதானவீதி, யாழ்ப்பாணம். (42616)

### பாலர் ஆசிரியராக

தபால் வழியில் பாலர் ஆசிரியர் பயிற்சி — க. பொ. த (சா/த) கடைசித் தகைமையாகும். பாலர் ஆசிரியர் சங்கம், மே/பா: திரு. வீ. கே. கந்தசாமி, 20, அச்சக ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (42437)

### திருத்த வேலைகள்

மேலைத்தேச, கீழைத்தேச வாத்திய இசைக் கருவிகளை திருத்திப் பெற்றுக் கொள்ள செ. ரங்கன், ரங்கன் இசைக் குழு, கச்சேரியடி, யாழ்ப்பாணம். (42600)

### மணமகள் தேவை

நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த 36 வயதுடைய B.A. பட்டதாரிக்கு (சொந்தமாகக் கடை வைத்திருப்பவர்) மணமகள் தேவை. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி, விளம்பரதாரர் இல 460, மானிப்பாய் வீதி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம். (42604)

### விவாக சேவை

மணமக்களின் பெற்றோர்/பாதுகாவலர் குறிப்புக்கள், தகவல்கள் படங்களுடன் வரலாம். ''சேவை நோக்கமும் நம்பகமும்'' இல: 3, யாழ். வீதி, பலாலி வீதி, 2ஆம் ஒழுங்கை முன்பாக யாழ்ப்பாணம். (42649)

# யாழ்ப்பாணத்தில் கைத்தொழில்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை

கொழும்பு, செப். 10

யாழ்ப்பாணத்தில் கைத்தொழில் முயற்சிகள் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. குடாநாட்டில் கைத்தொழில் முயற்சிகளை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான திட்டமொன்றை கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு தயாரிக்க விருப்பதாகவும் —

யாழ்ப்பாணத்தில் குழப்பங்கள் ஆரம்பிப்பதற்கு முன்னர் தொழில் முயற்சிகளை நடத்திய கைத்தொழில் அதிபர்களிடம், மீண்டும் அவர்களது கைத்தொழில் வர்த்தக முயற்சிகளில் முதலீடு செய்யுமாறு கோரப்பட்டுள்ளது என்றும் —

கைத்தொழில் அபிவிருத்தி சபையின் கீழ் இயங்கி வந்த அச்சுவேலி கைத்தொழில் பேட்டையில் தொழிற்சாலைகளை நடத்திவந்தவர்களுக்கு இப்பொழுது முன்னுரிமை வழங்கப்படும் என்றும் கூறப்படுகிறது

கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் சி.வி. குணரத்தினவின் பணிப்பின் பேரில் இந்தத்திட்டம் அமுல் செய்யப்படவிருக்கிறது. யாழ்ப்பாணக் கைத்தொழில் அதிபர்களுடன் அமைச்சர் ஏற்கனவே பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் நிலைமை வழமைக்குத் திரும்பியதும் தமது கைத்தொழில்களை ஆரம்பிக்க அவர்கள் இணங்கியுள்ளார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அலுமினியப் பாத்திரங்கள், சவர்க்காரம், கண்ணாடிப் பாத்திரங்கள், இரசாயனப் பொருள்கள், மரக்கறி எண்ணெய், புடைவைகள். இலகு பொறியியல் உற்பத்தி, மரத்தினாலான விளையாட்டுப் பொருள்கள், தளபாடங்கள், அச்சக உபகரணங்கள், சிமெந்தினாலான பொருள்கள் போன்றனவற்றை இந்தக் கைத்தொழில் அதிபர்கள் ஏற்கனவே உற்பத்தி செய்து வந்துள்ளனர் என்றும் —

மூலப் பொருள்களைப் பெற்றுத் தருவதுடன் தொலைத் தொடர்பு சேவைகளும் ஆரம்பிக்கப்பட்டால் கைத்தொழில்களை ஆரம்பிக்க உதவியாக இருக்கும் என கைத்தொழில் அதிபர்கள் தெரிவித்துள்ளனர் என்றும் — மேலும் தெரிவிக்கப்படுகிறது. (இ-10)

# அகதிகள் புனர்வாழ்வுக்கு அமெரிக்கா ரூ $6\frac{1}{2}$ கோடி

## நன்கொடையாக வழங்கியது

கொழும்பு, செப். 10

இலங்கை அகதிகளின் புனர்வாழ்வு வேலைகளுக்கென அமெரிக்கா சுமார் 6 கோடி 50 இலட்சம் ரூபாவை அதாவது 11 இலட்சம் அமெரிக்க டொலரை நன்கொடையாக வழங்கியுள்ளது.

இது தொடர்பாக இலங்கையில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தின் தகவல் பிரிவு பத்திரிகை அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

சனத்தொகை, அகதிகள் மற்றும் குடியேற்றத்துக்கான அமெரிக்க அரசாங்க பணியகத்தினால் இந்த நிதி உதவி வழங்கப்படுகிறது

இந்தியாவில் இருந்து நாடு திரும்பும் அகதிகளுக்கும், இலங்கையில் உள்நாட்டிலேயே இடம்பெயர்ந்திருப்பவர்களுக்கும் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகமே உதவி வழங்கிவருகிறது. (இ 3)

வடமாகாண புற்றுநோய்
எயிட்ஸ் நோய்த் தடுப்புச் சங்கம்

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

வடமாகாண புற்றுநோய் — எயிட்ஸ் நோய்த் தடுப்புச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் 21-09-96 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு பிலிப் வைத்தியசாலை இல. 228, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள எமது சங்கப் பணிமனையின் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. சகல அங்கத்தவர்களையும் தவறாது பொதுக்கூட்டத்தில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம். தனித் தனி அறிவித்தல்கள் அனுப்பிவைக்கப்படமாட்டா.

வைத்திய கலாநிதி இ. தெய்வேந்திரன்
தலைவர்,
வடமாகாண புற்றுநோய் - எயிட்ஸ் நோய்த் தடுப்புச் சங்கம்.

(சி/2862)

# கதிர்காமத்தில் மாணவன் கைது

கொழும்பு, செப். 10

குண்டு தயாரிப்பதற்கு தேவையான பொருள்கள் அடங்கிய பட்டியலுடன் கதிர்காமம் சென்ற கொழும்பைச் சேர்ந்த பாடசாலை மாணவர் ஒருவர் கதிர்காமம் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார் என்று கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

17 வயதான இப்பாடசாலை மாணவரது கையில் இருந்த பட்டியலில் ரேசர் போலை, இரும்புக்கம்பி, போத்தல் ஒட்டுத்துண்டுகள், வெடிமருந்துகள் என்பன இடம்பெற்றிருந்தன என்று கூறப்படுகிறது. (இ-3)

# நாவலிலிருந்து விழுந்து காயம்

நாவல் மரத்தில் ஏறிய போது தவறிவிழுந்து சிறுவன் ஒருவர் காயமடைந்தார்.

கொடிகாமம் தவசிகுளத்தில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் சந்தசாமி ரஜீந்திரன் (வயது 8) என்ற சிறுவனே காயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-15)

# ஒருவருக்கு அரைக் கி. சீனி

நல்லூர் வர்த்தக திணைக்கள விற்பனை நிலையத்தில் 17 ரூபா 50 சதத்துக்கு அரைக்கிலோ சீனி வழங்கப்படுகிறது.

ரூபா 20 பெறுமதியான வேறு பொருள்கள் எவற்றையும் கொள்வனவு செய்பவர்களுக்கு மட்டுமே சீனி ½கிலோ வழங்கப்படுகிறது. (இ-111)

# பரந்தனிலிருந்துஓர்அடிகூட படை பின் வாங்கவில்லை

## அனுருத்த ரத்வத்தை தெரிவிப்பு

கொழும்பு, செப். 10

கடந்த அரசாங்க காலங்களில் பலாலி, வெற்றிலைக்கேணி, பூநகரி ஆகிய முகாம்களில் 14 கிலோ மீற்றர் சதுர சுற்றளவே படையினரின் கட்டுப்பாட்டில் இருந்தது. இப்பொழுது நாம் யாழ். குடாநாடு முழுவதையும் எமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளோம். பரந்தனில் இருந்து ''உண்மை வெற்றி'' படையினர் பின் வாங்கியிருப்பதாக சிலர் பொய்ப் பிரசாரம் செய்கின்றனர் அங்கிருந்து படைகள் ஓர் அடிகூட பின்வாங்கவில்லை.

பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த நாடாளுமன்றத்தில் மேற்கண்டவாறு கூறினார்:

வடபகுதி மக்களை புலிகளிடம் இருந்து விடுவிக்கும் எமது போராட்டம் தொடரும். இதே வேளை தேவைப்பட்டால் புலிகளுடன் பேச்சுவார்த்தையும் நடத்துவோம் என்றும் — அவர் கூறினார். (இ)

# கொழும்பு செல்லும் நோயாளருக்கு

யாழ்ப்பாணம் செப். 10

யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளரிடம் பதியப்பட்ட — கொழும்பு செல்ல வேண்டிய — நோயாளிகளும் உதவியாளர்களும் பிரயாணத்துக்குரிய ஆவணங்களுடன் எதிர்வரும் 12 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7.00 மணிக்கு பணிப்பாளர் பணிமனைக்குச் சமூகமளிக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ)

# கப்பலில் சென்றவர் மரணம்

கொழும்பு, செப். 10

யாழ்ப்பாணத்தில் இருந்து கப்பல் மூலம் திருகோணமலை சென்ற பயணி ஒருவர் மாரடைப்பால் உயிரிழந்தார்.

திருநெல்வேலியில் தனியார் வைத்தியசாலையில் தொழில் புரியும் ஞானமுத்து அருளானந்தம் (வயது 66) என்பவரே இறந்தவர் ஆவார்.

தமிழ்நாடு தருமபுரத்தில் உள்ள தமது குடும்பத்துடன் இணைவதற்காக இவர் கடந்த புதன்கிழமை காங்கேசன்துறையில் இருந்து திருகோணமலைக்கு சென்ற பயணிகள் கப்பலில் சென்றிருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. [இ-3]

## காரைநகர் ப. நோ. கூ. சங்கம்

(வரையுள்ளது)

பொதுச்சபை உறுப்பினர்களுக்கான

## முக்கிய அறிவித்தல்

மேற்படி சங்கத்தின் பொதுச் சபை உறுப்பினர்கள் தாங்கள் தற்போது வசிக்கும் நிரந்தர முகவரியினை பொதுமுகாமையாளர், காரைநகர் ப. நோ. கூ. சங்கம், காரைநகர் என்ற முகவரிக்கு உடன் அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

க. தியாகராஜா
பொது முகாமையாளர்

ப. நோ. கூ. சங்கம்,
காரைநகர்.
09. 09. 96 (42642)

# அரச வெற்றிடங்களுக்கு பயிலுநர் பட்டதாரிகள்

கொழும்பு, செப். 10

அரசாங்க நிறுவனங்களில் நிலவும் வெற்றிடங்களை பயிலுநர் பட்டதாரிகள் மூலம் நிரப்புமாறு திட்ட அமுலாக்கல், இன விவகார தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சு சகல அமைச்சுக்களின் செயலாளர்களையும் பணித்துள்ளது.

கடந்த ஜூலை மாதம் அமைச்சரவை எடுத்த தீர்மானப்படி இப்பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது. (இ-3)

## 5ஆம் மாத நினைவஞ்சலி

யாழ். விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தைச் சேர்ந்த

உத்தியோகஸ்தர் திரு. வி. சி. சிவரத்தினம் அவர்களின் தந்தையார்

### அமரர் வி. சிவசுப்பிரமணியம்

(B. A. (Lond), B. Sc (Lond), F. R. G. S.
(இளைப்பாறிய அதிபர், ஸ்கந்தவரோதய கல்லூரி, சுன்னாகம்)

அவர்களது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அமரரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ். விலைமதிப்பீட்டுத்
திணைக்கள ஊழியர்களும்
நலன்புரிச்சங்கமும்

148, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம். (42611)

## 31-ம் நாள் நினைவஞ்சலி

அமரர்

### இராமலிங்கம் சச்சிதானந்தம்

(S. L. E. A. S, Rtd. Principal,
Chief Education Officer And Editor, Sivathondan,
முன்னாள் அதிபர் யா/ கனகரத்தினம் ம. ம. வி)

எமது கல்லூரியின் கற்றல், கற்பித்தல் செயற்பாட்டுக்கு கடுமையாக உழைத்ததன் மூலம் சமூகத்தில் பெரும் நன் மதிப்பையும் பாராட்டையும் பெற்று பழைய மாணவர்களின் பெரும் மதிப்பையும் சம்பாதித்துக் கொண்ட அமரரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அதிபர், ஆசிரியர்கள்,
பா. அ. ச,
பழையமாணவர்சங்கம்.
யா/ கனகரத்தினம் ம. ம. வி

(42654)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## திருமலையில் தமிழர்கள்

வவுனியாவில் தமிழர்கள் படும்பாடு குறித்து மூன்று நாள்களுக்கு முன்னர் தான் இப்பத்தியில் எழுதியிருந்தோம். கொழும்பு செல்வதற்கென்று வவுனியா சென்றடையும் தமிழ் மக்கள், நீண்ட காலம் அங்கு தடுத்து வைக்கப்படுகின்றனர். தமிழர்கள் என்ற ஒரே காரணத்திற்காக அவர்கள் இத்தனை அவலங்களையும் கஷ்டங்களையும் அனுபவிக்க வேண்டியுள்ளது.

இதே போன்று, யாழ்ப்பாணம் வருவதற்கென்று திருகோணமலை சென்றடைந்த சுமார் ஆயிரம் தமிழர்கள் பயணம் செய்ய முடியாத நிலை ஒன்று தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இவர்களில் ஒரு பகுதியினர் வவுனியாவில் இருந்து திருகோணமலை சென்றவர்கள். ஏனையோர் யாழ்ப்பாணம் வந்து தமது உறவினர்களையும் உடைமைகளையும் பார்ப்பதற்காகக் கொழும்பிலிருந்து ஆவலோடு புறப்பட்டவர்கள்.

இவர்கள் தமது யாழ்ப்பாணப் பயணத்தைத் தொடர்வதற்கு பொலீஸ் சான்றிதழ் பெற வேண்டுமாம்.

கொழும்பில் இருந்தவர்களும் வன்னியில் இருந்தவர்களும் தாம் ஆபத்தற்ற பேர்வழிகள் என்று திருகோணமலையில் சான்றிதழ் பெறுவது எப்படி? தாம் அப்பாவிகள் என்று எவ்வாறு பொலீஸாருக்கு நிரூபிப்பது?

தாம் தங்கிய இடங்களில் இருந்து இவர்கள் நற்சான்றிதழ்களைப் பெற்று வந்தவர்கள் அல்லர். இத்தகைய ஒரு 'நிரூபித்துக் காட்டும் படலம்' திருகோணமலையில் அரங்கேறும் என்பதற்கு எவ்வித முன்னறிவிப்பும் இல்லை.

அப்படி ஒரு முன்னறிவிப்பு இருந்தால் கூட வன்னியில் இருந்து தமது உயிரைக் காப்பாற்றுவதற்காக அவசரத்தில் அவதிப்பட்டு ஓடி வந்தவர்கள்—

அந்த இக்கட்டான வேளையில் கிராம சேவகரிடம் தானும் ஒரு நற்சான்றிதழை எப்படிப் பெற்றிருக்க முடியும்?

இலங்கையில் இருந்து வெளிநாடு ஒன்றுக்குச் செல்வதற்கு ஒரு தடவை கடவுச் சீட்டுப் பெற்றால் போதும். ஐந்து வருட காலத்துக்கு தேவை ஏற்படும் போதெல்லாம் வெளிநாட்டுக்குப் பயணம் செய்யலாம்.

ஆனால் வவுனியாவில் இருந்து கொழும்பு செல்வதற்கும் திருகோணமலையில் இருந்து யாழ்ப்பாணம் வருவதற்கும் எத்தனை சான்றிதழ்கள் பெறவேண்டும்; எத்தனை தடவைகள் சோதனைக்கு ஆளாக வேண்டும்; அதற்கு ஓர் எல்லையில்லை.

தமது அவசர தேவைகளுக்காகப் பயணம் செய்யும் தமிழர்களும் இடம் பெயர்ந்து இப்போது தமது சொந்த இடங்களுக்குத் திரும்பும் தமிழர்களும் பலவித கட்டுப்பாடுகளுக்கும் தொல்லைகளுக்கும் இம்சைகளுக்கும் ஆளாக நேர்கிறது. இது முற்றிலும் மனிதாபிமானமற்ற, மனித நேயமில்லாத செயலாகும்.

பயணத்தில் உண்டாகும் வழமையான சிரமங்கள், கஷ்டங்களாக இவற்றைக் கருத முடியாது. தமிழ் மக்களும் ஏனையோரைப் போன்று குறைந்த சோதனைகளுடனும் தடங்கல்கள் மன உளைச்சல்கள் இன்றியும் தமது பயணத்தை மேற்கொள்ள வசதி செய்யப்பட வேண்டும். அரசு இது விடயத்தில் மீள்பரிசீலனை செய்யுமா?

# ஈராக்-லிபிய தலைவர்கள் உள்ளவரை

# முஸ்லிம்களை பணியவைக்கமுடியாது

### அலவி மௌலானா தெரிவிப்பு

கொழும்பு, செப். 10

லிபியத் தலைவர் கேணல் கடாபி, ஈராக் தலைவர் சதாம் ஹுசெய்ன் போன்றவர்கள் இருக்கும் வரை எந்த ஒரு பயங்கரவாத சக்தியும் முஸ்லிம் சமூகத்தை அடிபணிய வைக்க முடியாது.

தகவல்துறை பிரதி அமைச்சர் எஸ். அலவி மௌலானா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஈராக் மீதான அமெரிக்க ஏவுகணைத் தாக்குதலைக் கண்டித்து கொழும்பில் கடந்த வெள்ளிக்கிழமை ஜும்மாத் தொழுகையின் பின்னர் முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து உரை நிகழ்த்துகையிலேயே அலவி மௌலானா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த ஆர்ப்பாட்டத்தின் போது ஈராக், லிபியா, ஈரான் மீதான பொருளாதாரத் தடைகளை நீக்கக் கோரியும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷமிட்டனர்.

ஈராக் மீதான தாக்குதல்களை கிளின்ரன் நிர்வாகம் நிறுத்தாது விட்டால் கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் முன்பு மௌன அமைதிப் போராட்டம் நடத்தப்போவதாகவும் பிரதி அமைச்சர் அங்கு கூறினார். (இ)

## இரத்தினக்கல் கண்காட்சி

கொழும்பு, செப். 10

இரத்தினக்கல் ஆபரண சர்வதேசக் கண்காட்சி நேற்று கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் நடைபெற்றது.

இரத்தினக்கல் ஆபரணங்களைத் தயாரிப்பதில் இலங்கை உலகில் முன்னணியில் திகழ்கிறது. இலங்கையில் 55 வகையான இரத்தினக்கற்கள் காணப்படுகின்றன. கடந்த வருடம் இலங்கை 52 கோடியே 60 இலட்சம் ரூபா பெறுமதியான இரத்தினக்கல் ஆபரணங்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தது. (இ-10)

## நல்லூர் பகுதி விசேட அ. அட்டை

நல்லூர் பிரதேச செயலர் பகுதியைச் சேர்ந்த ஜே/106, ஜே/108 கிராம அலுவலர் பிரிவுகளுக்கான விசேட அடையாள அட்டைகளின் ஒரு தொகுதி நல்லூர் பிரதேச செயலகத்திற்கு வந்து சேர்ந்துள்ளது.

உரியவர்கள் மேற்படி கிராம அலுவலரிடம் தமது விவரங்களைப் பெற்று நல்லூர் பிரதேச செயலகத்தில் அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-111)

## சந்தைக்கு முன் சைக்கிள் விட தடை

சாவகச்சேரி செப். 10

சாவகச்சேரி நவீன சந்தைக்கு முன்பாக சைக்கிள் விடுவது இன்று செவ்வாய் முதல் தடைசெய்யப்பட்டுள்ளதாக சாவகச்சேரி நகரசபை செயலாளர் சி. நடராசா அறிவித்துள்ளார்.

வீதி விபத்தை தவிர்க்கும் முகமாகவும் போக்குவரத்து நெருக்கடியைத் தவிர்க்கும் முகமாகவும் சந்தையின் ஏனைய பகுதியில் அமைக்கப்பட்டுள்ள சைக்கிள் பாதுகாப்பு நிலையங்களில் சைக்கிள்களை விடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-117)

## கூட்டுறவு கடைகளுக்கு மா

தென்மராட்சி, செப். 10

கப்பலில் கொண்டு வரப்பட்ட மா மூடைகளும், சோடா வகைகளும் அந்தந்தப் பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கொண்டு வரப்பட்டன.

நேற்று முதல் அவை பாவனையாளர்களுக்கு வழங்கப்பட இருந்தன. (இ-117)

# காரின் டிக்கியில் இலங்கைத் தமிழர்கள்

### நோர்வேயில் சம்பவம்

ஒஸ்லோ, செப். 10

டென்மார்க்கில் இருந்து படகில் ஏற்றி நோர்வேக்கு கொண்டுவரப்பட்ட ஒரு காரின் பின்புற ''டிக்கியில்'' இரண்டு இலங்கைத் தமிழர்கள் ஒளிந்து கொண்டிருந்ததை நோர்வே சுங்கப்பகுதியினர் கண்டுபிடித்தனர்.

டென்மார்க் நாட்டவரான பெண்மணி ஒருவரால் செலுத்தப்பட்டுவந்த இந்தக் கார் சுங்கப்பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது, ஒளிந்திருந்தவர்கள் கண்டுபிடிக்கப் பட்டனர். (இ-3)

# தேர்த் திருவிழாவையிட்டு ஆதீனத்தில் பலநிகழ்வுகள்

நாளை நடைபெறும் நல்லூர் கந்தன் ஆலய தேர்த் திருவிழாவையொட்டி நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் பல நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்துள்ளது. ஆதீன குருமூர்த்தி ஆலய மண்டபத்தில் காலை 8-30 மணி முதல் 3 மணிவரை சூரபத்மன் வதைப் படல புராண படனமும்—

ஆதீன கலாமண்டபத்தில் காலை 9 மணிக்கு பண்ணிசை வாணர் வி. சிவஞானசேகரத்தின் பண்ணிசைக்கச்சேரியும் காலை 11 மணிக்கு செல்வன் ஏ. அனுசாந்தனின் இசைச் சொற்பொழிவும் இடம் பெறும். (இ-3-30-51)

## நல்லூரான் திருவடி

நல்லூரான் திருவடியை
நான் நினைத்த மாத்திரத்தில்
எல்லாம் மறப்பேனடி — கிளியே
இரவு பகல் காணேனடி!

ஆன்மா அழியாதென்று
அன்றெனக்கு சொன்ன மொழி
நான் மறந்து போவேனோடி — கிளியே
நல்லூரான் தஞ்சமடி!

தேவர் சிறை மீட்ட
செல்வன் திருவடிகள்
காவல் எனக்காமடி — கிளியே
கவலை யெல்லாம் போகுமடி!

எத்தொழிலைச் செய்தாலென்ன
ஏதவத்தைப் பட்டாலென்ன
கந்தன் திருவடிகள் — கிளியே
காவல் அறிந்திடடி!

பஞ்சம் படை வந்தாலும்
பாரெல்லாம் வெந்தாலும்
அஞ்சுவோமோ நாங்களடி — கிளியே
ஆறுமுகன் தஞ்சமடி!

— யோகர் சுவாமிகள்

## கருணை மழை மொழியும் கந்தா!

நல்லூர்ப் பதியில் உறைந்திடும் முருகனே!
நற்கருணை மழை பொழிந்திடும் கந்தனே!
குறமகள் மகிழ்ந்திடும் குமரனே!
குறைகள் தீர்த்திடும் குகனே!
அழகு வேல் ஏந்திடும் வேலனே!
அன்பர்கள் துன்பமகற்றிடும் ஆறுமுகனே!
சரணம் சரணம் சரவணபவனே!
சரணம் சரணம் சண்முகனே!

- ம. மதியரசி

நல்லூர் உற்சவகால சிறப்பு அம்சம்

# முதலாந்தர அதிபர்களுக்கு 'பிச்சை' ஓய்வூதியமா?

அண்மைக்காலத்தில் ஆசிரியர்களது மாதாந்த வேதனம் கணிசமான அளவுக்கு உயர்த்தப் பட்டது. இஃது ஆசிரியர்களுக்குக் கிடைத்த 'வெற்றி' என்பதிலும் பார்க்க, அவர்களுக்குரிய நீதி வழங்கப்பட்டுள்ளது என்பதே பொருத்தமானதாகும்,

ஆனால் இந்தச் சம்பள உயர்ச்சியை அடிப்படையாக வைத்து, அண்மைக்காலத்தில் ஓய்வுபெற்ற முதலாந்தர அதிபர் பதவி வகித்தவர்களதும் ஏனைய அதிபர் தரங்களில் பதவி வகித்து ஓய்வு பெற்றவர்களதும் ஓய்வூதியத்தைப் பார்க்கும் போதுதான் வேதனையும் வெட்கமும் ஒரு சேர எம் போன்றோரை அலைக்கழிக்கின்றன.

1994 ஆம் ஆண்டு தொடங்கி ஓய்வு பெறும் ஒரு பயிற்றப்பட்ட உதவியாசிரியரின் மாதாந்த ஓய்வூதியம் ரூபா 8,205/- ஆகும். ஆனால் அதேகாலத்திற்குச் சிறிது முன்பதாக ஓய்வு பெற்ற ஒரு முதலாந்தர அதிபரின் மாதாந்த ஓய்வூதியம் ரூபா 4,250/- ஆகும். அத்துடன் உதவியாசிரியர்களாக இருந்து ஓய்வு பெற்றவர்களுக்கு வழங்கப்படும் விசேட படியும் இவர்களுக்குக் கிடையாது.

இந்த முரண்பாடு மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேறுபாடாகத் தெரிகிறது. முதலாந்தர அதிபர் பதவிவகித்து ஓய்வு பெற்றவர்கள் ஏன் இவ்வாறு ஓய்வூதியத்தில் பின் தள்ளப்பட்டுள்ளார்கள்? நான்கு தசாப்தங்கள் ஆசிரியராகவும் அதிபராகவும் கடமையாற்றி ஓய்வு பெற்றவன் யான். 14 ஆண்டுகள் முதலாந்தர அதிபராகப் பதவி வகித்து 1992-ல் ஓய்வு பெற்றேன். எனது மாதாந்த ஓய்வூதியம் 4250 ரூபாவைத் தாண்டவேயில்லை. உதவியாசிரியர்களாகப் பதவி வகித்து ஓய்வு பெற்றவர்கள் நிலை மேலும் மோசம்.

கல்வியமைச்சு, வடக்குக் கிழக்கு மாகாணசபைக்கல்வியமைச்சு, கல்வித்திணைக்களம் ஆசிரிய, தொழிற்சங்கத்தினர் அரசாங்க அதிபர் ஆகியோர் இந்த முரண்பாடுகளை உரிய இடத்துக்குச் சுட்டிக்காட்டி நல்ல தீர்வுபெற முடியாதா? தத்தம் பதவியுயர்வும் வெளிநாட்டுச் சுற்றுலாக்களும் போதும், ஓய்வூதியர்கள் எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை என்ற எண்ணமா அவர்களுக்கு?

ஓய்வூதியர்களின் இளைப்பாற்றுச் சம்பளம் குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்ட ஆணைக்குழு பத்து வீதம் உயர்வு வழங்கலாம் எனச் சிபார்சு செய்துள்ளதாம். என்ன வெட்கக்கேடு! ஏனைய அரச உத்தியோகத்தர்களுக்கு 50 வீத உயர்வு வழங்கப்படும் போது, ஓய்வூதியர்களுக்கு 10 வீத உயர்வு என்பது கேள்விக்குரியதாகும்!

சர்வதேச மரபு முறைகூட இங்கு பேணப்படுவதாக இல்லை. பொதுவான ஒரு சம்பள உயர்வு வழங்கப்படும் போது முன்னேறிய நாடுகளில், முதலில் ஓய்வூதியர்களே கவனிக்கப் படுகிறார்கள். அவர்கள் வகித்த பதவி, தரம் என்பன ஆராயப்பட்டு நியாயமான வேதன உயர்வு வழங்கப்படுகிறது.

### வாசகர் திருமுகம்

ஏன் இலங்கையிலும் முன்னர் அவ்வாறே ஓய்வூதிய உயர்வு வழங்கப்பட்டுள்ளது! இப்போது மட்டும், நிறைவேற்று அதிகாரமுடைய உயர் பதவி வகித்த முதலாந்தர அதிபர்களை, நாலாந்தரத்திற்கு இழந்துவிட்டுப் ''பிச்சைச் சம்பளம்'' வழங்குவது போல பழைய வேதனத்தையே வழங்குவது எவ்வாறு நியாயமானதாகும்?

நிதி நெருக்கடி காரணம் என்று கூறமுடியாது! எத்தனையோ ஓய்வு பெற்ற அதிபர்கள் இயற்கையெய்திவிட்டார்கள். உயிரோடிருப்பவர்கள் சிறு தொகையினரே அவர்களுக்கு உரிய உயர்ந்த ஓய்வூதியத்தை தாமதமின்றி வழங்கச் சம்பந்தப்பட்ட அனைவரும் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஓய்வு பெற்ற முதலாந்தர அதிபர்கள், ஓய்வூதியர் சங்கம், ஆசிரிய தொழிற் சங்கத்தினர் கல்விப் பணிப்பாளர்கள், அரசாங்க அதிபர் ஆகியோர் இவ்விடயத்தில் உடன் கவனஞ் செலுத்த வேண்டும் என்று வேண்டுகின்றேன்.

- த. அருணகிரிதாசர்
உரும்பராய். (ஓய்வு பெற்ற முதலாந்தர அதிபர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகள் இயக்கத்தை தடை செய்தாலும் பேச்சுவார்த்தை நடத்த தடை இல்லை

## அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

கொழும்பு, செப். 10

'விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்தால் அவர்களுடன்பேச்சுவார்த்தை நடத்த முடியாதென்பது ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல.'

இப்படி நீதி அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் கூறினார்.

மாத்தளையில் நடந்த கருத்தரங்கு ஒன்றில் பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளைத் தடை செய்வது சம்பந்தமாக அரசாங்கம் மிக விரைவில் தீர்மானம் எடுக்கும். அதில் எவ்வித பிரச்சினையும் எழவில்லை. அந்த அமைப்பை இலங்கை தடை செய்தாலும் உலகில் ஏனைய நாடுகளும் தடை செய்ய வேண்டுமென்ற நிலைப்பாடில்லை.

அவர்களைத் தடை செய்தால் அவர்களுடன் பேச்சு நடத்த முடியாதென்பது ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல. அவ்வாறான சிக்கல் ஏதுமில்லை.

உலகில் உரிய முறையில் எத்தனையோ இயக்கங்கள் தடை செய்யப்பட்டதாயினும் அவ்வியக்கங்களுடன் அரசுகள் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளன.

எதிர் காலத்தில் விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த ஜனாதிபதி மூன்று நிபந்தனைகளை முன்வைத்துள்ளார்.

ஜனாதிபதி முன்வைத்துள்ள ஆயுதம் கீழே வைத்தல், அரசியல் பேச்சு நடத்தல், பேச்சுக்கான கால எல்லை ஆகிய மூன்று நிபந்தனைகளையும் புலிகள் ஏற்க வேண்டும்.

இந்த நிபந்தனைகளை ஏற்றால் பேச்சுக்களை ஆரம்பிக்கலாம்.

அவர்களைத் தடைசெய்தாலும், அவர்களோடு பேசுவதில் தடை ஏதுமில்லை. இவர்கள் மீதான தடை உத்தரவு விரைவில் அமுலுக்கு வரும் — என்றார். (இ-3)

# தென் பகுதிக்கு மீண்டும் யாழ். கடல் அட்டை

யாழ்ப்பாணம், செப். 10

யாழ் மாவட்டத்தில் இருந்து நீண்ட இடைவெளிக்குப் பின்னர் தெற்கே கடல் உணவுப் பொருள்கள் அனுப்பப்படவிருக்கின்றன.

4 ஆயிரம் கிலோ கிராம் கடல் அட்டை அடுத்த சில நாள்களில் ''ரீ யூனியன்'' என்னும் கப்பலில் கொழும்புக்கு அனுப்பப்படவிருப்பதாகவும்—

அத்துடன் 2 ஆயிரம் மெற்றிக்தொன் வெங்காயம், புகையிலை ஆகியனவும் இக்கப்பலில் தெற்கே அனுப்பப்படவிருப்பதாகவும் — செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-3)

# வெங்காயச் சாக்குகளில் புலிகளுக்கு வெடிமருந்து கடத்தல் என்று தெரிவிப்பு

கொழும்பு, செப். 10

புலிகள் தங்களுக்குத் தேவையான வெடிமருந்துகளையும் ஆயுதங்களையும் வெங்காயச் சாக்குகளில் மறைத்து கொழும்புக்குக் கொண்டு வந்துள்ளனர் என்று புலன் விசாரணைகளில் இருந்து தெரியவருவதாக கொழும்புப்பத்திரிகைச்செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

தெஹிவளை, கௌடானா வீதியில் உள்ள வீடு ஒன்றில் கைதான செல்வராசா மற்றும் முகத்துவாரத்தில் கைதான கொலம்பஸ் என்ற புலிச் சந்தேகநபர்கள் தெரிவித்த தகவல்களில் இருந்து இது தெரியவந்திருப்பதாகவும் அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொலம்பஸ் முகத்துவாரத்தில் குளிரூட்டப்பட்ட சிகை அலங்கரிப்பு நிலையம் ஒன்றை நடத்தி வந்தார் என்றும் கூறப்படுகிறது. (இ)

## கிளிநொச்சிப் பகுதியில்

# அனேகமாக முழுப் பணிமனைகளும் இடம் பெயர்ந்தே இயங்குகின்றன

கொழும்பு, செப் 10

''உண்மை வெற்றி'' இராணுவ நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்த கண்டாவளை உதவி அரச அதிபர் பணிமனை தர்மபுரம் மகா வித்தியாலய மண்டபத்தில் தற்காலிகமாக இயங்கி வருகிறது.

கிளிநொச்சிப் பகுதியில் இயங்கிவந்த மக்கள் வங்கிக் கிளை தற்போது அக்கராயன் பகுதியிலும்— இலங்கை வங்கிக் கிளை வன்னேரிக் குளத்திலும்— மட்டுப்படுத்தப்பட்ட சேவையை ஆரம்பித்துள்ளன.

பரந்தனில் இயங்கி வந்த மக்கள் வங்கிக் கிளை தற்போது ஸ்கந்தபுரத்தில் இயங்க ஆரம்பித்துள்ளது.

கரைச்சி வடக்கு ப. நோ. கூ. சங்க தலைமையலுவலகம் மேற்படி சங்கத்தின் கல்மடு நகர் விற்பனை நிலையத்தில் இயங்குகிறது.

கரைச்சி தெற்கு ப. நோ. கூ. சங்கம் ஸ்கந்தபுரத்தில் இயங்குகிறது.

இதே வேளை கிளிநொச்சி மாவட்ட அத்தியாவசிய சேவைக்கூட்டம் அண்மையில் அரச அதிபர் தில்லை நடராஜா தலைமையில் ஸ்கந்தபுரத்தில் உள்ள செயலக மண்டபத்தில் நடைபெற்றது. (இ-3)

# இலக்கத் தகடு இல்லாத மோட்டார் சைக்கிள்கள்

## சாவகச்சேரியில் பொலீஸ் சோதனை

தென்மராட்சி, செப். 10

சாவகச்சேரியில் இலக்கத் தகடு இல்லாத மோட்டார் சைக்கிள்கள் பொலீஸாரினால் பரிசோதனை செய்யப்படுகின்றன.

பரிசோதனையின் போது உரிய இலக்கத்தகடு இல்லாத மோட்டார் சைக்கிளோட்டிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படுகிறது.

அத்துடன் வீதி ஒழுங்கைப் பராமரிக்கும் நடவடிக்கைகளிலும் பொலீஸார் ஈடுபட்டுள்ளனர்.

சமாந்தரமாக வரும் சைக்கிளோட்டிகள் எச்சரிக்கப்படுகின்றனர்.

அதே சமயம் அதிகரித்த வாகனப் போக்குவரத்துக்களால் ஏற்படுகின்ற வீதிவிபத்துக்களைத் தவிர்க்கும் பொருட்டு வீதி ஒழுங்கு விதிமுறைகளைப் பின்பற்றுமாறு பொதுமக்களைப் பொலீஸார் கேட்டுள்ளனர்.

அநியாயமாக ஏற்படும் உயிரிழப்புகளைத் தவிர்க்கும் முகமாக சைக்கிள்களில் சமாந்தரமாகச் செல்வதையும் பிரேக் இல்லாத வாகனங்களை ஓட்டுவதையும்தவிர்க்குமாறும் அவர்கள் கேட்டுள்ளனர்.

குறிப்பாக மாணவர்கள், ரியூசனுக்குச் செல்லும் மாணவர்கள், அரச ஊழியர்கள், ஆகியோர் வீதி ஒழுங்கு விதிகளைப் பின்பற்றுமாறும் -

வீதி ஒழுங்கு விதிகளை மீறுவோர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்படுமெனவும் அவர்கள் அறிவித்துள்ளனர். (இ-117)

# சிறந்த கிரிக்கெட் வீரராக சனத் ஜெயசூரியா தெரிவு

கொழும்பு, செப். 10

''ஸ்ரீலங்கா அசோசியேற் பியட்'' கம்பனி நடத்திய போட்டி ஒன்றில் 95, 96 ஆம் ஆண்டில் இலங்கையின் சிறந்த கிரிக்கெட் வீரராக சனத் ஜெயசூரியா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இத்தகைய போட்டி ஒன்று இலங்கையில் நடத்தப்பட்டது இதுவே முதல் தடவை ஆகும்.

இனி ஒவ்வொரு வருடமும் இப்போட்டியை நடத்த இக் கம்பனி உத்தேசித்துள்ளது.

கடந்த ஆண்டு மே மாதத்துக்கும் இவ்வாண்டு ஏப்ரல் மாதத்துக்கும் இடையில் கிரிக்கெட் விளையாட்டில் சிறப்பாக விளையாடியதற்காக இந்த விருது அவருக்கு வழங்கப்படுகிறது.

அதே சமயம் இவ்வாண்டுக்கான சர்வதேச சிறந்த ஆட்டக்காரருக்கான விருது மேற்கிந்திய அணியைச் சேர்ந்த பிரேலாறாவுக்கு வழங்கப்படவிருக்கிறது. (இ-3)

முன்னணி...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ணோட்டங்களையும் அறிய முடியும் என்றார்.

டாக்டர் ஜயதேவ உயன்கொட, சாள்ஸ் அபயசேகரா, றோஹான் எதிரிசிங்க. வண. தேவானந்தா உட்பட 30 முக்கிய சிங்கள புத்திஜீவிகள் இன்றைய சந்திப்பில் பங்கு பற்றுகின்றனர். (இ-3)

கப்பலில்..
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சங்கங்கள் மூலம் மண்எண்ணெயை விநியோகிக்க செயலக புனர்வாழ்வுப் பிரிவினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் —

எதிர்காலத்தில் மண்எண்ணெய் விநியோகம் முழுமையாக பெற்றோலியம் கூட்டுத்தாபனத்தால் மேற்கொள்ளப்படும் என்றும் — அரச அதிபர் கூறினார். (இ-3)

# கடை சீல் வைப்பு

தென்மராட்சி, செப். 10

நிர்ணயிக்கப்பட்டவிலையை விட பொருள்களைக் கூடுதல் விலைக்கு விற்பனை செய்த சாவகச்சேரி நகர்ப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்று நேற்றுப் படையினரால் சீல் வைக்கப்பட்டது. (இ—117)

# தண்ணீரில் காய்ச்சும் போது எரிபொருள் உருவாக்கும் மூலிகை!

## இந்தியாவில் கண்டு பிடிப்பு

தண்ணீரில்போட்டுக் காய்ச்சும் போது எரிபொருள் போன்ற டீஸலை உருவாக்கும் மூலிகை ஒன்றைத் தான் கண்டுபிடித்துள்ளதாக தென்னிந்தியாவிலுள்ள கிராமவாசி ஒருவர் கூறுகிறார்.

பல விஞ்ஞான நிபுணர்கள் இது குறித்து ஆழ்ந்த சந்தேகம் தெரிவித்தாலும் ஆராய்ச்சிக் கூடத்தில் நடத்தப்பட்ட பரிசோதனைகள் இது முற்றானமோசடி அல்ல எனத் தன்னை நம்பவைத்துள்ளதாக அரசின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இது பற்றி பி.பி.சி டில்லி செய்தியாளர் அன்றூ வைற்றர் தெரிவிப்பதாவது:-

இது நம்பமுடியாத ஒருவிஷயம் போல் தெரிகிறது. ஆனால் மூலிகையிலிருந்து ஹைட்றோ காபன் பெறலாம் என்பது போலக் காட்டும் இந்தக்கண்டுபிடிப்பைப் பற்றி கடுமையான ஆய்வுகள் நடத்தப்பட வேண்டும்.

இதைக் கண்டு பிடித்தவர் இந்தியாவின் தெற்குப் பகுதியைச் சேர்ந்த இளம் விவசாயி ஒருவர். ராமர்பிள்ளை என்ற பெயருடைய இவர் பிரஸ்தாப மூலிகை தண்ணீருடன்கொதிக்க வைக்கப்பட்டபோது சாதாரண யந்திரம் ஒன்றை இயக்கவல்ல மண்ணெண்ணெய் அல்லது டீஸல் போன்ற எரிபொருள் ஒன்றைத் தான் கண்டுபிடித்துள்ளதாக மற்றவர்களை நம்பச் செய்வதற்கு பல ஆண்டுகளாக முயற்சிசெய்து வந்துள்ளார்.

இப்போது அரசாங்கத்தின் அறிவியல் மற்றும் தொழில் நுட்பத் திணைக்களம் இது பற்றி ஆராய்ந்து வருகிறது.

ஆரம்பகட்ட ஆராய்ச்சிகளின் முடிவுகள் சரியென்றே வந்துள்ளன என அங்குள்ள உயர்நிலை அதிகாரியான வி. ராமமூர்த்தி கூறுகிறார்.

இந்தச்செயற் திட்டத்தைப் பற்றி இந்தியப் பிரதமருக்கும் விளக்கமளிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இருப்பினும் பல அறிவியலாளர்கள் இதை நம்பவில்லை. இந்த எரிபொருளில் இருக்கும் காபன் எங்கிருந்து வருகிறது என எவராலும் விளக்கிக் கூறமுடியாது.

எனினும் தீர்க்கமான அத்தாட்சி ஒன்று கிடைக்கும் வரை பூமியில் வெறும் மாற்றத்தை உண்டு பண்ணக் கூடிய இந்தக் கண்டுபிடிப்புக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட மாட்டாது என இந்திய அரசாங்கத்தின் தரப்பில் பேசவல்ல மூத்த அதிகாரி ஒருவர் கூறினார்.

இப்படி பி. பி.சியின் டில்லிச் செய்தியாளர் மேலும் கூறினார். (இ-10)

# மோறோ போராளிகளின் 24 வருட போராட்டம் தென் பிலிப்பீன்ஸில் முடிவு

மணிலா, செப். 10

பிலிப்பீன்ஸ் நாட்டின் ''மோறோ'' போராளிக் குழுவின் தலைவர் ஆயுதங்களைக் கைவிட்டு ஜனநாயக நீரோட்டத்தில் கலந்து கொண்டார். சுமார் 1 லட்சத்து 20 ஆயிரம் பேரைப் பலிகொண்ட 24 வருடப் போராட்டம் முடிவுக்கு வந்துள்ளது.

கடந்த வாரம் பிலிப்பீன்ஸ் ஜனாதிபதி பிடெல் ராமோஸுக்கும் மோறோ போராளிக்குழுவின் தலைவர் நூர் மிசெறிக்கும் இடையே கைச்சாத்தான சமாதான ஒப்பந்தத்தை அடுத்து பிலிப்பீன்ஸ் தென்பகுதியில் பொதுத்தேர்தல் நடைபெற்றது.

பல்கலைக்கழகப் பேராசிரியரான நூர் மிசெறி அவரது சொந்த மாகாணமான பிந்தனாவ மாகாணத்தில் உள்ள வாக்குச்சாவடி ஒன்றில் வாக்களித்தார் என செய்தி நிறுவனங்கள் தெரிவித்தன.

முஸ்லிம்கள் பெரும்பான்மையினராக வாழும் பிந்தனாவ மாகாணத்தில் அதிகமாக ஏழை மக்களே வாழ்கின்றனர்.

21 மாவட்டங்களுக்காக தேர்தல் நடத்தப்பட்டுள்ளது எனவும் நாளை புதன்கிழமை மட்டில் நூர் மிசெறியின் வெற்றி உறுதியாகும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-10)

மரண அறிவித்தல் 2 ஆம் பக்கத்தில்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 2[illegible] இலக்கத்திலுள்ள அவர்களதுபணிமனையில் 10-09-1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org